சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

அமர்வு வழக்கு எண் 159/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (LW – 1) | நாள் | 27.07.2026 |
| பெயர் | ஜனார்த்தன் | வயது | 48 |
| தந்தை பெயர் | பக்கிரிசாமி | ஊர் | ஆட்டூர் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை – 1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆட்டூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது குத்தாலம் வட்டம், செங்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக பண்டாரவாடை கிராம நிர்வாக அலுவலராக மூன்று வருடம் வேலை பார்த்தேன். அப்போது கிராம உதவியாளராக மாரியப்பன் என்னுடன் பணிபுரிந்தார். கடந்த 13.05.2023ல் நானும் கிராம உதவியாளர் மாரியப்பனும் வேலை முடிந்து மங்கைநல்லூர் கடைதெருவில் பேசிமுடித்துவிட்டு நான் என் ஊருக்கும்மாரியப்பன் அவர் ஊருக்கும் சென்றோம். அன்றைய தினம் 8.00 மணியளவில் கிராம உதவியாளர் மாரியப்பன் எனக்கு போன் செய்து அவரது வீட்டிற்கு போகும்வழியில் பண்டாரவாடை கலைஞர் காலனியில் ஒரு வீட்டில் பயங்கர வெடிசத்தமும் புகையும் ஏற்பட்டதாகவும் கலைவாணன் வீட்டில் அவரது இரண்டு முன்கயைிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் உதவியாளர் அங்கிருப்பதாகவும் தகவல் சொன்னார். மேலும் போனில் உதவியாளர் 108 வாகனத்தில் கலைவாணனையும் அவர் மனைவி சித்ராவையும் மயிலாடுதுறை அரசு மருத்தவமனைக்கு ஏற்றிவிட்டதாகவும் என்னிடம் தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு போனேன். கலைவாணன் வீட்டிற்கு போய் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தோம். அவருடைய சமையலறை பின்வாசல் படிக்கட்டிலும் தரையிலும் சுவற்றிலும் இரத்தக்கறையும் மருந்துப்பொருட்களும் பிய்ந்து போன மனித தோலும் சிதறிக்கிடந்தன. சமையக்கட்டிற்கு பக்கத்தில் உள்ள அறையில் சில்வர் பத்திரத்தில் நூலால் சுற்றப்பட்ட நாட்டு வெடிகுண்டும் இருந்தது. அதன் மூலம் கலைவாணன் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் என்று தெரிந்து கொண்டேன். கொறாடாச்சேரி கலைச்செல்வன் கொலைமுயற்சி வழக்கிலும் VGK மணிகண்டன் அவரை கலைவாணன் கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் வழிப்பறி

27/07/2026

வழக்குகளும் அவர்மீது இருப்பதாக எனக்கு ஏற்கனே VAO வாக இருப்பதாகல் தெரியும். இரவு 9.45 மணியளவில் பெரம்பூர் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று நானும் உதவியாளருடன் புகார் கொடுத்தேன். நான் எழுதிக்கொடுத்த புகார் **அதசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். கலைவாணன் மற்றும் அவரின் மனைவி சித்ரா மீது புகார் கொடுத்தேன். மறுநாள் BDDS வந்து கலைவாணன் வீட்டில் சோதனை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பால்ரஸ் குண்டுகள், மூன்று பெபிகால் டியூப், ஆணிகள், நூல்கண்டு, இரண்டு சில்வர் பாத்திரங்கள் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியவை தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் 5 கிமீ தூரமிருக்கும். கிராம உதவியாளர் எந்த கைபேசி எண்ணிலிருந்து எனக்கு தகவல் சொன்னார் என்று போன் நம்பரை நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வெடிவிபத்து எத்தனை மணிக்கு ஏற்பட்டது என்று குறிப்பிட்டு என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு இரவு 8.15 மணிக்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாக போலிசார் அங்கிருந்தார் என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் போகும்போது எதிரிகள் யாரையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் சென்ற விவரத்தை என் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்தேனா என்றால் இல்லை. ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் மூன்று பிரதி தயார் செய்து ஒன்றை அலுவலத்தில் வைத்துக்கொண்டு மற்றொன்றை நடுவர் நீதிமன்றத்திற்கு ஒன்றை வட்டாட்சியருக்கும் அனுப்ப வேண்டுமென்றால் சரிதான். நான் அவ்வாறு இவ்வழக்கில் அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. இரவு 9.45 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்தேன். சம்பவ இடத்திலிருந்து பெரம்பூர் காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் 6 கிமீ இருக்கும். சம்பவம் நடந்த வீடு உள்ள சாலையின் திசைகள் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ வீட்டின் வாசல் திசை ஞாபகம் இல்லை. அன்றைய தினம் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் நேராக காவல் நிலையத்திற்குதான் சென்றேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. 1வது எதிரி ஏற்கனவே பல வழக்குகளில் இருப்பதால் அவரை பற்றி அறிக்கையை காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் சம்பவத்திற்கு பிறகுதான் தெரியும். கண்காணிக்கப்படும் எதிரியை பற்றி விசாரித்து தெரிந்து கொள்ளவேண்டுமென்பது என் கடமை என்றால் தெரியாது. காவல் நிலையத்திற்கு நான் சென்ற பிறகு போலிசார் சொல்லிதான் இந்த புகாரை

27/07/2026.

நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரை காவல் நிலையத்தில் வைத்துதான் எழுதிக்கொடுத்தேன். புகார் கொடுத்தபிறகு போலிசார் என்னை எப்போதவது விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. எந்த சாட்சிகள் முன்னிலையில் பொருட்களை கைப்பற்றியிருக்கிறார்கள் என்று போலிசிடம் சொல்லியுள்ளேன். மறுநாள் சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து மறுநாள் சம்பவ இடத்திற்கு சென்றதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது எதிரி அவரது வீட்டிலிருந்தாரா இல்லையா என்று நான் பார்க்கவில்லை. நான் பார்த்தபோது வெடிகுண்டுகள்இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுப்பதற்கு முன்பாக போலிசாரிடம் தகவல் சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். புகார் எழுதும்போது போலிசார் பக்கத்திலிருந்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி எந்தவிதமான சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும் அவருக்கு வேண்டாவதவர்கள் அவர் மீது போட்ட வெடிகுண்டால் அவருக்கு இந்த காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் சரிவர விசாரணை செய்யாமல் போட்ட பொய் வழக்கிற்கு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் புகார் கொடுத்த சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

27/07/2026
VAO. 19. [illegible]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,
அமர்வு வழக்கு எண் 159/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 (LW – 2) | நாள் | 27.07.2026 |
| பெயர் | மாரியப்பன் | வயது | 39 |
| தந்தை பெயர் | நீலமேகம் | ஊர் | வழுவூர் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை – 1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநாள்கொண்டாச்சேரி மேலத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது பண்டாரவாடை கிராம உதவியாளராக 2018லிருந்து வேலை பார்க்கிறேன். அப்போது கிராம நிர்வாக அலுவலராக ஜனார்த்தனன் என்னுடன் பணிபுரிந்தார். கடந்த 13.05.2023ல் நானும் கிராம நிர்வாக அலுவலர் ஜனார்தனனும் வேலை முடிந்து மங்கைநல்லூர் கடைதெருவில் பேசிமுடித்துவிட்டு நான் என் ஊருக்கும் கிராம நிர்வாக அலுவர் அவர் ஊருக்கும் சென்றோம். அன்றைய தினம் 7.45 மணியளவில் நான் கிராம நிர்வாக அலுவலர் ஜனார்த்னனுக்கு போன் செய்து என் வீட்டிற்கு போகும்வழியில் பண்டாரவாடை கலைஞர் காலனியில் ஒரு வீட்டில் பயங்கர வெடிசத்தமும் புகையும் ஏற்பட்டதாகவும் கலைவாணன் வீட்டில் அவரது இரண்டு முன்கையிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் நான் அங்கிருப்பதாகவும் தகவல் சொன்னேன். மேலும் போனில் நான் 108 வாகனத்தில் கலைவாணனையும் அவர் மனைவி சித்ராவையும் மயிலாடுதுறை அரசு மருத்தவமனைக்கு ஏற்றிவிட்டதாகவும் கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் சென்னேன். கிராம நிர்வாக அலுவலர் உடனே சம்பவ இடத்திற்கு போனேன். கலைவாணன் வீட்டிற்கு போய் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தோம். அவருடைய சமையலறை பின்வாசல் படிக்கட்டிலும் தரையிலும் சுவற்றிலும் இரத்தக்கறையும் மருந்துப்பொருட்களும் பிய்ந்து போன மனித தோலும் சிதறிக்கிடந்தன. சமையக்கட்டிற்கு பக்கத்தில் உள்ள அறையில் சில்வர் பத்திரத்தில் நூலால் சுற்றப்பட்ட நாட்டு வெடிகுண்டும் இருந்தது. அதன் மூலம் கலைவாணன் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் என்று தெரிந்து கொண்டேன். கலைவாணன் மீது ஏற்கனவே பல வழக்குகள் இருப்பது எனக்கு தெரியும். இரவு 9.45 மணியளவில் பெரம்பூர் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று

நானும் கிராம நிர்வாக அலுவலரும் நேரில் சென்றோம் கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். கலைவாணன் மற்றும் அவரின் மனைவி சித்ரா மீது புகார் கொடுத்தார். மறுநாள் BDDS வந்து கலைவாணன் வீட்டில் சோதனை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பால்ரஸ் குண்டுகள், மூன்று பெபிகால் டியூப், ஆணிகள், நூல்கண்டு, இரண்டு சில்வர் பாத்திரங்கள் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியவை தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. நான் வீட்டிற்கு வரும் வழியில் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். சம்பவ இடத்திற்கு சுமார் 7.45 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்திற்கு நான் போனபோது போலிசார் அங்கிருந்தார்கள் பொதுமக்களும் கூடியிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது 108 ஆம்புலன்ஸ் வாகனம் அங்கிருந்து கிளம்பிக்கொண்டிருந்தது. காயம்பட்ட கலைவாணனை நான் பார்க்கவில்லை. என்னை போலிசார் மறுநாள் விசாரித்தார்கள். வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. கிராம நிர்வாக அலுவலரிடம் கையெழுத்து வாங்கினார்கள். கிராம நிர்வாக அலுவலர் புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதிக்கொடுத்தார். நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் நேரடியாக காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் அது சரியல்ல. வழக்கிற்காக சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மீது வழக்குகள் இருப்பதாக போலிசார் சொல்லிக்கொடுத்ததை கேட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கு ஏற்பட்ட காயம் வேறு யாரோ 1வது எதிரியின் விரோதிகளால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக கிராம நிர்வாக அலுவலரால் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

N.l

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை